3rd November 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : It is not in public interest to answer the question.

திரு. கரு. சிமைச்சாமி : கனம் சபாநாயகர் அவர்களே, கச்சத்தீவு. . .

MR. SPEAKER : " It is not in public interest to answer the question " என்று கனம் முதல் அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். ஆகவே, அந்த விவரத்திற்குள் கனம் அங்கத்தினர் போகக்கூடாது.

திரு. செ. மாதவன் : கச்சத்தீவு யாருக்குப் பாத்தியம் என்பதை வேண்டுமானால் சொல்லாமல் இருக்கலாம். ஆனால் அங்கே செல்லக்கூடியவர்கள் பலாத்காரமாகத் தடுக்கப்படுகிறார்களே, அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதெல்லாம் இந்த அரசாங்கத்திற்கும் வேறொரு அரசாங்கத்திற்கும் உள்ள கடிதப்போக்குவரத்து சம்பந்தப்பட்டது. அதையெல்லாம் விவரமாகச் சொல்லுவது நல்லதல்ல என்று நினைக்கிறேன்.

Theft of idols

* 343 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any report has been received recently regarding the theft of three valuable bronze idols from the Perumal Temple at Karuvankurichi near Vaduvur, in Mannargudi taluk; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) · The Inspector, Hindu Religious and Charitable Endowments, Needamangalam, has reported that the following three idols were stolen on 4th March 1966 night—

(1) Perumal (Varadarajar) idol 2 feet height—Value Rs. 100.

(2) Sri Devi idol 1½ feet height—Value Rs. 100.

(3) Sri Boodevi idol 1½ feet height—Value Rs. 75.

A complaint has been lodged with Vaduvur Police Station and the matter is under investigation.

திரு. வை. சங்கரன் : இம்மாதிரி கடந்த ஒன்றிரண்டு ஆண்டுகளாகவே ஒரு சில கோவில்களில் இருந்து விக்கிரகங்களெல்லாம் திருட்டுப் போய்க்கொண்டு வருவதினாலே இம்மாதிரி இனிமேலாவது திருட்டுகள் ஏற்படாமல், பந்தோபஸ்து செய்வதற்கு முன் ஏற்பாடுகள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு சொத்து என்று இருந்தால் திருடக்கூடியவர்கள் இருப்பார்கள். திருட்டைத் தடுப்பதற்கு அந்தந்த ஸ்தாபனங்கள் என்னென்ன செய்யவேண்டுமோ, அது கவனிக்கப்பட்டு வருகிறது.